CC.No. 215 /2017 நாள் : 21.07.2025

PW 3- திரு.தங்கராஜு

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

1) உடைந்த நிலையில் ஒரு மேல் மூடியுடன் கூடிய ஒரு பிளாஸ்டிக் பைப் அ.சா.பொ.1-ஒன்று, உடைந்த நிலையில் ரெட்மீ செல்போன் அ.சா.பொ.2 -ஒன்று. நிறைய பொருட்கள் உடைந்திருந்தது அதில் ஒன்று இரண்டு பொருட்களை மட்டும்தான் போலீசார் கைப்பற்றினார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) எதிரிகளுக்கும் எனக்கும் தொட்டார் போல் நிலம் உள்ளது என்றால் சரிதான். பூமி சம்மந்தமான வழக்கு சிவில் நீதிமன்றத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு யார் யார் மேல் போட்டுள்ளேன் என்றால் எதிரிகள் உட்பட வருவாய் துறை அதிகாரிகள். இது தவிற வேறு யார்மேலாவது வழக்கு தொடர்ந்தேனா என்றால் மொத்தம் 13 நபர்கள் மீது வழக்கு தொடர்ந்துள்ளேன். எனக்கும் எதிரிக்கும் எல்லை பிரச்சனை என்றால் சரிதான். ஜேசிபி வைத்து நிலத்தை தோண்டிய போது அந்த ஜேசிபியின் பதிவெண் மற்றும் அதை யார் இயக்கினார்கள் அதன் உரிமையாளர் என்ற விவரத்தை போலீஸ் விசாரணை மற்றும் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2)ஜேசிபி வண்டி திரும்பியபோது பொலி நிலம் சேதம்மடைந்துள்ளது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இதற்கு முன்பாகவே நிலம் அளவை பிரச்சனை வந்தது தொடர்பாக போலீசில் புகார் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அடுத்த நாள் விசாரித்தார்கள். நான் சம்பவ இடத்தை அடையாளம் காட்டினேனா என்றால் இல்லை. யார் அடையாளம் காட்டினார்கள் என்ற விவரம் நேரடியாக தெரியுமா என்றால்

எனது மனைவி காட்டியுள்ளார். போலீசார் என்னை விசாரித்த்போது கீழே விழுந்த செல்போனை அப்பாசாமி செல்போனை எடுத்து உடைத்தார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அப்பாசாமி என்னை அடிக்கும் போது கீழே விழுந்தது அதை எடுத்து அவர் உடைத்தார்.

3) போலீஸ் விசாரணையில் அப்பாசாமி எனது செல்போனை எடுத்து கல்லில் அடைத்து உடைத்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். நிறைய PVC குழாய்களை சேதேப்படுத்தியதாக புகாரில் மற்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் எதும் நடைபெறவில்லை ஆகையால் தான் போலீசார் விசாரணையில் ஒரு மாதிரியாகவும் நீதிமன்ற விசாரணையில் முரண் பட்ட சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சான்று பொருட்கள் எல்லாம் பின்னிட் தயாரித்து கொடுத்தது என்றும் சம்பவம் எதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் செல்போனின் இரசீது கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. எதிரி அப்பாசாமிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் இடையூறு செய்யவேன்மென்ற என்னத்தில் கொடுக்கப்பட்ட பொய் புகார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று எப்போது போலீசாருக்கு தகவல் கொடுத்தேனா என்றால் மருந்துவமனையில் இருந்து கொடுத்தார்கள் நான் நேரடியாக தகவல் கொடுக்கவில்லை. எனது முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகள் என்னை தாக்கவும் இல்லை செல்போனை உடைக்கவும் இல்லை பிளாஸ்டிக் பைப்பை உடைத்து கொலை மிரட்டல்விடுத்ததாக சொன்னால் வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.07.21 19:05:07 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.